# கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கப் போக்கும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும்

*எம்.ஐ.எம் கலீல், சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*பீடாதிபதி, கலை, கலாசார பீடம்,*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

## 01. அறிமுகம்:

இவ்வாய்வுக் கட்டுரையானது கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கத்தின் போக்கினைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள, அம்பாரை மாவட்டத்தின் கிழக்குக் கரையோர வலயத்தின் வடகிழக்குப் பகுதியில் கல்முனைப் பிரதேசம் அமைந்துள்ளது.

1. கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கல்முனை நகரம், இஸ்லாமாபாத், மணற்சேனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது, சேனைக் குடியிருப்பு, திரவந்திய மேடு ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

2. இப்பிரதேசம் 11 பழைய கிராமங்களையும் நிருவாக ரீதியாக 76 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இதன் மொத்தப்பரப்பளவு 27.7 சதுரகிலோ மீற்றராகும். சனத்தொகையாக 70439 (2001) பேர் வசிக்கின்றனர். இங்கு பெரும்பான்மையாக முஸ்லிம்களும் அடுத்ததாகத் தமிழர்களும் பறங்கியர்களும் சிங்களவர்களும் வாழ்கின்றனர். பெரும்பாலானவர்களின் தாய் மொழியாகத் தமிழ்மொழி அமைந்துள்ளது.

3. கல்முனை மக்களின் பிரதான தொழில் நடவடிக்கை வர்த்தகமாக உள்ளது. வர்த்தக நடவடிக்கைகள் அம்பாரை மாவட்ட கிராமங்களோடும் இலங்கையின் ஏனைய நகரங்களோடும் இடம்பெறுகின்றன. இங்கு பெருமளவிலான கைத்தொழில் நடவடிக்கைகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. நகரை அண்மிய ஏனைய பகுதிகளில் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு முதலிய தொழில்களும் இடம்பெறுகின்றன.

இதன் பௌதீக அமைப்பும் காலநிலையும், வரண்ட பிரதேசத்தின் தன்மையினைப் பெரிதும் கொண்டு அமைந்துள்ளது. 1960ஆம் ஆண்டிற்கு முன்னர் இப்பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தரவுகளைக் கொண்டு 1970ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரைக்குமான காலப் பகுதியில் கருவளத்தில் ஏற்பட்ட மாற்றத்தினைக் கண்டறியும் ஆய்வாக இவ்வாய்வு இடம்பெறுகின்றது. கல்முனைப் பிரதேசத்தின் குடித்தொகை வளர்ச்சிச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் கருவாக்கம், இறப்பு விகிதம், இடப்பெயர்வு என்பனவற்றின் போக்கும் அதனோடு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது.

கருவளவாக்கமானது "இனப்பெருக்கத்திறன் கொண்ட பெண்கள் தமது விவாக காலத்தில் பிரசவிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது". இது குடித்தொகைப் பிரச்சினையோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளதால் அவை பற்றிய ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருளாதார சமூகப் பண்பாட்டுக் காரணிகளைப் பாதிக்கும் ஒரு காரணியாக கருவளவாக்கம் இருப்பதோடு, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பிறப்புக்கள் இதிலேயே தங்கி இருக்கின்றது. இந்நோக்கில் ஆய்வுப் பிரதேசத்தின் கருவளவாக்கப் போக்கானது

எவ்வாறு காணப்படுகின்றது, அதனை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை என்பன பற்றிய விடயங்களை பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய ஆய்வினை மேற்கொள்ள விஞ்ஞானபூர்வமான கணிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட தரவுகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இத்தகைய தரவுகளே நம்பகத் தன்மையானதும் உண்மையானதுமான முடிவுகளைத் தரக்கூடியதாக அமையும் என்ற காரணத்தினாலாகும்.

தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகின்ற போது அம்பாரை மாவட்டத்தின் சராசரிப் பிறப்பு விகிதம் அதிகரித்த போக்கினைக் காட்டுகின்றது. அதாவது 1963 இலிருந்து 1981ஆம் ஆண்டுவரை தேசிய மட்டத்தில் 1000 பேருக்கு 34.1 வீதத்திலிருந்து 28.0 வீதமாகக் குறைந்துள்ள போது இம்மாவட்டத்தில் 41.0 வீதத்திலிருந்து 29.2 வீதமாகக் குறைந்துள்ளது. ஆயினும், இவ்விகிதம் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்காலத்தில் இங்ஙனம் தொடர்ந்து குறைந்து செல்லுமானால் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் சராசரிப் பிறப்பு விகிதம் சமனாக முடியும்.

எனினும், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட தரவுகளினது பரிசீலனைக் காலம் குறுகியது என்பதனாலும், கிடைக்கக்கூடிய தரவுகள் போதுமானதாக இல்லாமையினாலும் இக்கூற்றானது உண்மைத்தன்மையுடையது எனக் கூறமுடியுமா என்பது ஐயத்துக்குரியது. இத்தகைய காரணிகள் மாவட்டத்தின் பிறப்பு விகிதத்தில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதன் பொருட்டு தரவுக் காலங்களை இரு பிரிவுகளாகப் பிரித்தறிதல் ஏற்புடையது. ஒன்று, 1963 – 1971 ஆம் ஆண்டுவரை. மற்றையது, 1972 இற்குப் பின்னரான காலப்பகுதி.

மேற்கூறிய காரணகாரியங்களைக் கண்டறிந்து இவ்வாய்வுக் கட்டுரையில் இனம் காணப்பட்ட கருவளம் தொடர்பான வெளிப்பாடுகளைக் கண்டறிதல் இன்றியமையாததாகும்.

## 02. ஆய்வு முறையியல் :

ஆய்வானது சமூகவியல் ரீதியிலான ஆய்வாக இருக்கின்ற காரணத்தினால் இவ்வாய்வினை மேற்கொள்ளப் பல்வேறு முறையில் தரவுகளையும், தகவல்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. இவ் ஆய்வில் கருவளவாக்கம் தொடர்பாக ஆய்வாளர்களின் முன்னைய ஆய்வுக் கண்ணோட்டங்கள், நூல்கள், சஞ்சிகைகள், அரச வெளியீடுகள், துறைசார்ந்த ஆராய்ச்சி நூல்கள் என்பனவும் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காகத் தரவுகள் இரு முறைகளில் பெறப்பட்டன.

### 1. முதனிலைத் தரவுகள்

1.1 ஆய்வாளர் நேரடியாக ஆய்வுப் பிரதேசத்தில் தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.

- 1.1.1 எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கேள்விக் கொத்தின் மூலம் தரவுகள் பெறுதல்.
- 1.1.2 பிரதேச செயலாளர் பிரிவில் மதிப்பீட்டிற்கமைய மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு தரவுகளைச் சேகரித்தல்.
- 1.1.3 கருவளவாக்க மாதிரிக் கட்டமைப்பைத் திரட்டுதல்.
- 1.1.4 மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் 15 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட திருமணம் முடித்த ஆண், பெண் இருவருமாவர்.

### 2. இரண்டாம் நிலைத் தரவுகள்

2.1 குடித்தொகைக் கணிப்பீடுகள்.
2.2 வாழ் நிலைப் புள்ளிவிபரப் பிரிவுகள்.
2.3 கருவள மதிப்பீடுகள்.
2.4 இலங்கை குடிப்புள்ளியியல் சுகாதார அளவீடுகள்.
2.5 ஆய்வுப் பிரதேச குடும்பத்திட்ட சங்க ஆய்வு அறிக்கைகள்.
2.6 கடந்தகால ஆய்வின் சமூக பொருளாதாரத் தரவுகள்.

விபரண அடிப்படையிலான அணுகுமுறை ஒன்றின் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்ளப்படுகிறது.

## 3. ஆய்வின் நோக்கம்

கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கப் போக்குகளையும் அவற்றிற்கான காரணகாரியத் தொடர்புகளையும் கண்டறிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைப்பதன் மூலம் இப்பிரதேசத்தின் மனித வளத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவது இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். எனினும், இங்கு குறிப்பிடப்படாத சில விடயங்களும் அவ்வப்பொழுது ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே, இவ்வாய்வின் நோக்கங்கள்:

- ஆய்வுப் பிரதேசத்தின் பொதுவான கருவளப் போக்கானது கடந்த 30 ஆண்டுகளில் தோற்றுவித்த நிலைமையை ஆராய்தல்.
- பிரதேச அடிப்படையில் மாநகரம், நகரம், கிராமம், குக்கிராமம் என்ற பிரிவுகளிடையே கருவள நிலையினை அறிதல்.
- ஆய்வுப் பிரதேசத்தில் கருவள நிலைபற்றிய உள்ளடங்கும் ஒவ்வொரு பகுதியிலும் வேறுபாட்டினை பரிசீலித்தல்.
- குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளினைக் தெளிவுபடுத்துதல்
- இன ரீதியிலான கருவள வேறுபாட்டினை நோக்குதல்.
- கருவளப் போக்குகளுக்குரிய காரணிகளைக் இனங்காணல்
- கருத்தடையுடன் தொடர்புடைய காரணிகளைக்கண்டறிதல்.
- கலாச்சாரம், பண்பாடு, சமயம் என்பவற்றுடன் தொடர்புடைய காரணிகளை நுணுக்கமாக பகுப்பாய்வு செய்தல்.
- விவாக வாழ்வில் இணையும் வயதெல்லையைக் மதிப்பீடு செய்தல்.

அட்டவணை – I

## கல்முனைப் பிரதேசத்தின் குடித்தொகைப் பரம்பல் - 2000

| தமிழ் பிரதேச சபை | |
|---|---|
| கிராமங்கள் | தொகை |
| கல்முனை | 10412 |
| பாண்டிருப்பு (தமிழ்ப் பிரிவு) | 8261 |
| நற்பிட்டிமுனை (தமிழ்ப் பிரிவு) | 3061 |
| சேனைக் குடியிருப்பு | 3830 |
| பெரிய நீலாவணை (தமிழ் பிரிவு) | 4777 |
| மொத்தம் | 30374 |

| முஸ்லிம் பிரதேச சபை | |
|---|---|
| கிராமங்கள் | தொகை |
| கல்முனைக்குடி | 18812 |
| இஸ்லாமாபாத் | 1061 |
| பாண்டிருப்பு (முஸ்லிம் பிரிவு) | 1112 |
| நற்பிட்டிமுனை (முஸ்லிம் பிரிவு) | 4831 |
| மருதமுனை | 10094 |
| பெரிய நீலாவணை | 4372 |
| சாய்ந்தமருது | 23375 |
| மொத்தம் | 63657 |

ஆதாரம் : திட்டமிடல் பிரிவு அம்பாரை அரச செயலகம் – 2001.

அட்டவணை – II

## கல்முனைப் பிரதேசத்தின் குடித்தொகை அடர்த்தி 1993 - 1999

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் | கு.தொ.அடர்த்தி ஒரு சதுர கி.மீ. |
|---|---|---|---|---|
| 1993 | 39627 | 39828 | 79455 | 1153.7 |
| 1994 | 41368 | 41609 | 82977 | 1204.8 |
| 1995 | 48884 | 43133 | 86017 | 1248.9 |
| 1996 | 44128 | 44378 | 88506 | 1285.1 |
| 1997 | 45266 | 45521 | 90787 | 1318.2 |
| 1998 | 46342 | 46526 | 92868 | 1348.5 |
| 1999 | 47361 | 48916 | 96307 | 1398.3 |

ஆதாரம் : பிரதேச சபை அறிக்கை கல்முனை – 2000.

### ❖ கருவளவாக்க அளவீட்டு முறைகள் :

குடித்தொகை மாற்றத்தினை ஏற்படுத்தும் காரணியாகக் கருவளவாக்கம் கொள்ளப்படுகின்றது. “கருவளவாக்கம் என்பது உயிர்வாழ்வன தமது சந்ததியினைத் தாங்கி உற்பத்தி செய்யும் ஆற்றலைக் குறித்து நிற்கின்றது. குடித்தொகைக் கல்வியில் கருவளவாக்கம், இறப்பு எனப்படும் அழிவு மூலகத்திலிருந்து முழுவதும் வேறுபட்டதாக, இயற்கையான மாற்றத்தில் காணப்படும் ஆக்கமூலமாகக் குறிப்பிடப்படுகின்றது.”
(M.E. Withrick 1996).

ஒரு நாட்டு மக்களது கருவளவாக்கத்தைத் தீர்மானிப்பதில் பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. அவையாவன: பெரும்பாலான மக்கள் கிராமத்தில் வாழ்தல், கல்வி அறிவுக்

குறைவு, மத நம்பிக்கையின் வெளிப்பாடு, இளவயதுத் திருமணம், வருமானக் குறைவு, பருவகாலத் தொழில், விவசாயத்தில் தங்கியிருத்தல், நோய்களின் தாக்கம், ஆண் - பெண் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, வறுமை, பொழுதுபோக்கின்மை, கணவன்-மனைவியரிடையே புரிந்துணர்வின்மை, தொடர்பு சாதனங்கள், கருத்தடைச் சாதனங்கள் ஆகியன மக்களிடையே சென்றடைவதிலுள்ள குறைபாடுகள், பால் விகித வேறுபாடுகள், அரசியற் காரணிகள், குடிசை வாழ் மக்களின் சமூக, பொருளாதார, கலாசாரக் காரணிகள் என்பனவே ஆகும்.

இந்தியாவில் இந்த விகிதம் 1965 இல் 6.2 ஆக இருந்து படிப்படியாக வீழ்ச்சி கண்டுள்ளது. 1992 இல் 3.9 என்ற மட்டத்தை எட்டியிருந்தது. பூட்டான், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மூன்று தசாப்த காலத்தின் போது கருவள மட்டங்களில் சிறு அளவிலான வீழ்ச்சி மட்டுமே ஏற்பட்டுள்ளது. இலங்கை சார்க் பிராந்தியத்திலேயே ஆகக் கூடிய கருவளவாக்க வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. 1965 களில் 4.9% ஆக இருந்த கருவளவாக்க விகிதம், குறை நிரப்பு மட்டத்திற்குப் பெருமளவிற்கு அண்மித்துள்ள பிராந்தியத்தின் ஒரே ஒரு நாடு இலங்கையாகவே உள்ளது. இலங்கையின் மரண விகிதம் கணிசமான அளவில் குறைவாக இருந்து வருவதனால் இலங்கைக்கான கருவளத்தின் குறை நிரப்பு மட்டம் 2.1% ஆகக் கருதப்படுகின்றது.

## ❖ கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கப் போக்கு:

கருவளவாக்கமானது இனப்பெருக்கத் திறன் கொண்ட பெண்களால் பிரசவிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. கருவளவாக்கத் திறனைப் பொறுத்தவரையில் அது பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளைப் பாதிக்கும் ஒன்றாகத் தொழிற்படுகின்றது. இந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தின் கருவளவாக்கப் போக்கு எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றி ஆராய்வோம்.

அட்டவணை – III

## கல்முனைப் பிரதேசப் பிறப்புப் போக்குகள் 1991 - 2001

| கல்முனைப் பிரதேச பிறப்புக்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| வருடம் | பிறப்புக்களின் எண்ணிக்கை | வீதம் |
| 1991 | 481 | 0.48 |
| 1992 | 502 | 0.50 |
| 1993 | 598 | 0.59 |
| 1994 | 617 | 0.62 |
| 1995 | 690 | 0.69 |
| 1996 | 708 | 0.71 |
| 1997 | 1269 | 1.27 |
| 1998 | 870 | 0.87 |
| 1999 | 1001 | 1.00 |
| 2000 | 1372 | 1.37 |
| 2001 | 2084 | 2.08 |

ஆதாரம் : அம்பாரை அரச செயலகம் திட்டமிடல் பிரிவு – 2001.

அட்டவணை III ஆனது, ஆய்வுப்பிரதேசத்தின் கடந்த 10 ஆண்டுகளுக்கான பிறப்பு எண்ணிக்கையின் போக்கைக் வெளிப்படுத்துகின்றது. இவ்வட்டவணையை நோக்கும்போது, ஒவ்வொரு வருடத்திலும் பிறப்புக்களின் போக்கு அதாவது கருவளவாக்கப் போக்கு அதிகரித்துள்ளது. இந்த நிலை 1997வரை தொடர்ந்து, 1998இல் ஒரு வீழ்ச்சிக்குப் பின்னர், 1999இல் மீண்டும் உயர்ந்துள்ளதை அவதானிக்கலாம். 1991ஆம் ஆண்டிலிருந்து

ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரு வீதத்தில் அதிகரித்துச் சென்ற பிறப்பாக்கமானது, 2000 – 2001ஆம் ஆண்டு வரையும் 1337 என்ற எண்ணிக்கையிலிருந்து 2048 ஆக அதிகரித்துள்ளதைக் காணலாம்.

1996இல் பிறப்புக்களின் எண்ணிக்கை 708ஆகக் காணப்பட்டது. ஆனால், 1997இல் 1269 ஆக அதிகரித்தது. 1998இல் திடீரென 870 ஆகக் குறைவடைந்துள்ளது. இதற்கு நேரடி, மற்றும் மறைமுக சமூக பொருளாதாரக் காரணிகள் தூண்டுகோலாய் அமைந்திருக்க வாய்ப்புண்டு. இவ்வாறான நேரடி சமூகக் காரணிகளில் அரசியல் முறைமை மிகவும் இன்றியமையாதது. அரசானது சுகாதார மருத்துவ சமூகநலத் துறைகளினூடாக இப்பிரதேசத்தில் பிறப்பைக் கட்டுப்படுத்த முனைகின்றது. கல்விக் காலம் நீடிப்பு, வெளிநாடு நோக்கிய இடப்பெயர்வு என்பனவும் இங்கு பிறப்பாக்கத்தைக் குறைத்துள்ளதைக் காணலாம். பிறப்பாக்கம் அதிகரித்துள்ளமைக்கான காரணங்களாக தொழில் இணைப்புக்காக மக்கள் உள்நோக்கிய இடப்பெயர்வும், கிராமப்புறங்களில் குடும்பத் திட்டச் சாதனங்களைப் பயன்படுத்துதலின் அறியாமை, பயம், வயோதிப காலத்தில் பராமரிப்பர் என்ற நம்பிக்கையும், மதங்களின் பாற்பட்ட உறுதியான பற்றும், அதிக குழ்ந்தைகள் இறைவனின் ஆசிர்வாதம் என்ற நம்பிக்கையும் அதிக கருவளவாக்கத்திற்குத் தூண்டுகோலின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

மறைமுக சமூகக் காரணிகளாக விவாக வயது, சட்ட முறிப்புச் செய்தல், பிரிந்து வாழ்தல், விதவையாதல், விவாகமாகாத நிலை, குழந்தைப் பேற்றின் பின் தவிர்த்துக் கொள்ளல் என்பனவும், மதமும், சமூகப் பழக்கவழக்கங்களும், தொழில்நிலைக்கல்வி, நேரடிப் போஷணை நிலை, நகராக்கம், பொருளாதார நிலை, குடும்ப அமைப்பு, பெண்களின் சமூக அந்தஸ்து, அரசியல் முறைமை என்பன காணப்படுகின்றன. சில பகுதிகளில் 25 வயதிற்குள் அதிகமான பெண்கள் திருமணம் முடிக்கின்றார்கள். அதிலும் குறிப்பாகச் சில பகுதியில் 10% இலும் அதிகமானவர்கள் 16 வயதிற்குக் கீழ்பட்ட வயதிலேயே திருமணம் செய்யும் நிலையும்

காணப்படுகிறது. இத்தகைய இளவயது விவாகம், கருச்செழிப்புக் காலத்தை அதிகரித்து, இப்பிரதேசத்தில் அதிக பிறப்புக்குக் காரணமாக அமைகிறது.

## கல்முனைப் பிரதேசத்தில் வைத்தியசாலை ரீதியாக சிசு மரண வீதம்

அட்டவணை – IV

| கல்முனைப் பிரதேசத்தில் வைத்தியசாலை ரீதியாக சிசு மரண வீதங்கள் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | சிசு மரணங்கள் (பிறப்புக்கால குழந்தை இறப்புக்கள்) | | |
| | *மருதமுனை வைத்தியசாலை* | *கல்முனை ஆதார வைத்தியசாலை* | *கல்முனைக்குடி (அஷ்ர.்ப் ஞாபகார்த்த) வைத்தியசாலை* |
| 1996 | 02 | 09 | 07 |
| 1997 | 02 | 08 | 09 |
| 1998 | 02 | 11 | 09 |
| 1999 | 01 | 06 | 03 |
| 2000 | - | 04 | 12 |
| 2001 | 01 | 06 | 04 |

ஆதாரம் : வைத்தியசாலை அறிக்கைகள் - 2001.

மேற்காட்டிய அட்டவணை IV ஆனது பிறப்புக்கால குழந்தை இறப்புக்களுடைய எண்ணிக்கையை வைத்தியசாலை ரீதியாகக் காட்டுகின்றது. இந்த அடிப்படையில் நோக்கும் போது மருதமுனை வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் 1996 – 2001 வரையான காலப்பகுதியில் மொத்தம் 08 பிறப்புக்காலக் குழந்தை இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு மருதமுனையில் குறைந்தளவு இறப்புக் காணப்படுவதற்குக் காரணம் இங்கு அனுமதிக்கப்படும் பிரசவத்

தாய்மார்கள் அநேகமாக மருதமுனையைச் சார்ந்தவர்களாக இருப்பதாகும். ஆனால், கல்முனை ஆதார வைத்தியசாலையிலும், கல்முனைக் குடி (அஷ்ரஃப் ஞாபகார்த்த) ஆதார வைத்தியசாலையிலும் ஓரளவு அதிகமான பிறப்புக்காலக் குழந்தை இறப்புக்கள் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இங்கு கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களிலிருந்தும் பிரசவத் தாய்மார்கள் அனுமதிக்கப்படுவதாகும். மேற்குறித்த அட்டவணைப்படி கல்முனை ஆதார வைத்தியசாலையில் 1998இல் 11 சிசு மரணங்கள் அதிகமானதாகவும், அதற்கு அடுத்த இடத்தில் 09ஆக 1996இலும் காணப்படுகின்றது. ஆகக் குறைந்த தொகையாக 04 பிறப்புக்காலக் குழந்தை இறப்புக்கள் 2000இல் பதிவாகியுள்ளது. கல்முனை ஆதார வைத்தியசாலையில் 1996இலிருந்து 2001வரையிலான காலப் பகுதியில் மொத்தமாக 44 பிறப்புக்கால குழந்தை இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கல்முனைக்குடி வைத்தியசாலையைப் பொறுத்தவரை அங்கும் 44 பிறப்புக்காலக் குழந்தை இறப்புக்களே 1996இலிருந்து 2001 வரைக்குமாய் நிகழ்ந்துள்ளது. இங்கு 2000ஆம் ஆண்டிலேயே அதிக எண்ணிக்கையான 12 இறப்புக்கள் காணப்படுகின்றது. மிகக் குறைந்த எண்ணிக்கையாக 1999இல் 03 இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## மறைமுகமான சமூகக் காரணிகள்

### விவாக வயது :

மறைமுகமான சமூகக் காரணிக்குள் விவாக வயது முக்கியமானது. பொதுவாக விவாக வயதானது, வளர்முக நாடுகளில், பெண்களுடைய கருச்செழிப்புக் காலமான 15 – 45 வயதுக்கு இடைப்பட்ட காலமாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இஸ்லாமிய முறைப்படி ஆண்களுக்கான விவாக வயது 14 ஆகவும் பெண்களுக்கான விவாக வயது 12 ஆகவும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 1950களின் பின்னர் சட்டப்படியான விவாகவயது ஆண்களுக்கு 21 வயதாகவும், பெண்களுக்கு 18 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு

பிறப்புரிமைச் சட்டத்தின் பிரகாரம் ஆண், பெண் இரு பாலாருக்கும் தலா 18 வயது விவாக வயதாக அறிவிக்கப்பட்டது. எனினும், இலங்கையில் சராசரி ஆண்களுக்கான விவாக வயது 27 ஆகவும், பெண்களுக்கான விவாக வயது 23.4 ஆகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(குகபாலன். கா. 1995).

ஆய்வுப் பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் இளவயது விவாகம் நடைபெற்று வந்துள்ளது. அண்மைக் காலங்களில் விவாக வயது அதிகரித்த போக்கினைக் கொண்டுள்ளது. உதாரணமாக 1974ஆம் ஆண்டுகளில் பெண்ணுக்குரிய சராசரி திருமண வயது 14ஆகவும் ஆண்களுக்குரிய திருமண வயது 24ஆகக் காணப்பட்டது. இந்த நிலை இன்று மாறி ஆணுக்குரிய திருமண வயது 29ஆகவும், பெண்ணுக்குரிய சராசரித் திருமண வயது 26ஆகவும் அதிகரித்துள்ளது. இப்போக்கினை அட்டவணை V விளக்குகின்றது.

அட்டவணை – V

**கல்முனைப் பிரதேசத்தின் விவாக வயதெல்லை - 2001**

| கிராமங்கள் | விவாக வயது | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| கல்முனை நகரம் | 29 | 26 |
| இஸ்லாமாபாத் | 21 | 17 |
| மணற்சேனை | 23 | 16 |
| நற்பிட்டிமுனை | 22 | 15 |
| பாண்டிருப்பு | 29 | 27 |
| மருதமுனை | 29 | 26 |
| பெரிய நீலாவணை | 28 | 23 |
| சாய்ந்தமருது | 27 | 24 |
| சேனைக் குடியிருப்பு | 23 | 19 |

ஆதாரம் : சமுர்த்தி அறிக்கை – 2001

ஆய்வுப் பிரதேசத்தின் திருமண வயது அதிகரித்துச் செல்வதற்குக் காரணங்களாக சாதி, சமூக பழக்கவழக்கங்கள், சடங்குமுறை, பெண்களின் பொருளாதார சமூக நிலை, பெண்களின் உயர்கல்வி, விவாகம் மற்றும் விவாக முறிப்புக்கான சட்டங்கள், விவாகம் செய்யும்

காலத்தில் கணவன் மனைவியினது வயது, கல்விக்காகச் செலவிடும் காலம், அதிகரித்த சீதனத் தொகை, வீடு, காணி, முதலியவற்றை எதிர்பார்த்தல், சோதிடத்தில் நம்பிக்கை, சீதனத் தொகையைச் சம்பாதிக்க சர்வதேச இடப்பெயர்வு, வறுமை என்பன அமையப் பெறுவதுடன் இவை கருவளவாக்க அளவையும் கட்டுப்படுத்துகின்றன.

## சட்டமுறிப்புச் செய்தல் :

இன ரீதியான விவாக முறிப்புச் சட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டப்படியான காழி நீதிமன்றத்தாலும் மற்றும் பொது நீதிச் சட்டத்தினாலும் சட்டமுறிப்புச் செய்கிறார்கள்.

விவாகமான கணவனும் மனைவியும் ஒன்றிணைந்த உறவு முறையின் மூலமே கருவளவாக்கத்தினை ஏற்படுத்துகின்றனர். இருந்தும் சில வேளைகளில் கணவனைத் தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ பிரிந்து வாழ்கின்ற போது கருவளவாக்க உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. கணவன் வெளிநாட்டிலோ அன்றி தூர இடத்திலோ சிறு தகராறால் பிரிந்திருக்கும் நிலையில் கருவளவாக்கம் இடம்பெறாது. மாவட்ட நீதிமன்றம்மூலம் சட்டமுறிப்புச் செய்தவர்களின் விபரங்களை அட்டவணை VI காட்டுகின்றது. விவாகரத்து உட்பட்டவர்களில் சிலருடைய கணவனோ அவரது மனைவியோ கல்முனைப் பிரதேசவரல்லாதவராக உள்ளனர்.

அட்டவணை – VI

## கல்முனைப் பிரதேசத்தில் சட்டமுறிப்புச் செய்தவர்களுடைய விபரம்

| வருடம் | விவாகரத்தானவர்களின் எண்ணிக்கை | முஸ்லிம் காதி நீதிமன்றம் மூலம் பெறப்பட்ட தரவு |
|---|---|---|
| 1990 | 03 | 102 |
| 1991 | 07 | 142 |
| 1992 | 08 | 122 |
| 1993 | 11 | 109 |
| 1994 | 12 | 130 |
| 1995 | 14 | 102 |
| 1996 | 04 | 70 |
| 1997 | 14 | 121 |
| 1998 | 12 | 130 |
| 1999 | 16 | 230 |
| 2000 | 11 | 95 |
| 2001 | 15 | 134 |

ஆதாரம் : பதிவாளர் அறிக்கை, நீதி மன்றம் / காழி நீதிமன்றம், கல்முனை – 2001

அட்டவணை VIஐ நோக்கும் போது கல்முனையில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிடக் கூடியளவு விவாகரத்து நடைபெற்று வருவதை அவதானிக்கலாம். கல்முனை நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்தானவர்களில் எண்ணிக்கையான 1990–1999 வரையான காலப்பகுதியில் 03இலிருந்து 16ஆக அதிகரித்துள்ளது. ஆனால், முஸ்லிம் காதி நீதிபதியின் மூலமாக 1996 – 1999 வரையான

விவாகரத்தானவர்களின் எண்ணிக்கை 70இலிருந்து 230ஆக அதிகரித்துள்ளது. எனவே, விவாகரத்து, முஸ்லிம் மக்களிடையே அதிகம் காணப்படுகின்றது. பொதுவாக 1999ஆம் ஆண்டில் இப்பிரதேச மக்களிடையே அதிகளவான விவாகரத்து நிலைமை அதிகரித்துள்ளது. மேலும், தற்காலிகமாகப் பிரிந்து வாழ்பவர்களின் எண்ணிக்கையும் சட்ட ரீதியற்ற முறையில் பிரிந்து வாழ்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அதேவேளை கணவன் மனைவியரிடையே பிணக்குகள் ஏற்படுமிடத்து சட்ட ரீதியாக மணவிலக்குப் பெற்றுக் கொள்வதனாலும் கருவளவாக்கம் நிகழ்வது தடைப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் விவாகரத்துக்கான காரணங்களாக சொத்து ரீதியான தகராறு, பாலியலுறவில் திருப்தியின்மை, போதைவஸ்துப் பாவனை, வறுமை, பல தீய பழக்கங்களுக்கு அடிமையாதல், சீதனக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, குழந்தை இன்மை, நோய்கள், சர்வதேச இடப்பெயர்வு, நீண்ட நாட்கள் கணவன் மனைவியுடனான தொடர்பற்றுப் போதல், மனைவியை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு கணவன் வேறொரு மணம் புரிதல், சந்தேகம், சிறு விடயங்களில் கூட கோபமடையக் கூடிய வார்த்தைகளைப் பிரயோகித்தல், புரிந்துணர்வின்மை, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமை போன்ற காரணங்களை நாம் இனங்காணலாம். இந்த விவாகரத்து, மத்திய தர வகுப்பினரிடையே தான் பெரும்பாலும் காணப்படுகின்றது. உயர் வகுப்பினரிடையே 5% இலும் குறைவாகக் காணப்படுகின்றது.

**விதவையாதல் :**

கருச் செழிப்புற்ற காலத்தில் விதவையாகும் நிலை ஏற்படும்போது அது கருவளவாக்கச் செயற்பாட்டைத் தடுத்துநிறுத்தக் காரணமாக அமைகின்றது. இதில் கணவன் அல்லது மனைவி இறக்கும் பட்சத்தில் கணவனோ அன்றி மனைவியோ விதவையாகின்றனர். இங்கு இளவயது விதவைகள் மறுமணம் செய்து கொள்வது சமூக ரீதியில் ஒரு அவமானமான செயற்பாடாகக் கருதப்படுவதால் இளவயதில் மறுமணம் செய்வது குறைவாக அமையப்பெறுதலும், இங்கு

கருவளவாக்கச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் காரணியாகின்றது. பின்வரும் அட்டவணை VII கல்முனைப் பிரதேசத்திலுள்ள விதவைகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

அட்டவணை – VII

## கல்முனைப் பிரதேசத்திலுள்ள விதவைகளின் எண்ணிக்கை - 2001

| கிராமங்கள் | விதவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| *கல்முனைக்குடி* | 824 |
| இஸ்லாமாபாத் | 38 |
| மருதமுனை | 364 |
| பாண்டிருப்பு | 50 |
| பெரிய நீலாவணை | 143 |
| நற்பிட்டிமுனை | 196 |

ஆதாரம் : சமுர்த்தி அறிக்கை – 2001

அட்டவணையின்படி ஆகக் கூடுதலான விதவைகளைக் (824) கொண்ட பகுதியாகக் கல்முனைக்குடி காணப்படுகின்றது. இங்கு குறைந்த விதவைகளைக் கொண்டுள்ள கிராமமாக இஸ்லாமாபாத் (38) காணப்படுகின்றது.

### விவாகமாகாத நிலை :

ஆய்வுப் பிரதேசத்தின் முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகளில் விவாகமாகாத நிலை குறைந்தளவாக இருக்கின்றது. விவாகமாகாமலிருப்பதற்கான நிலைமையை நிர்ணயிப்பதில் கல்விக் காலம் நீடித்தல், கூடியளவு சீதனம், தொழில் தகைமை, ஜாதகத்தில்

நம்பிக்கை, கணவனைத் தெரிவு செய்வதிலுள்ள இடர்பாடு, சாதிப்பாகுபாடு, வேலைவாய்ப்பின்மை, வறுமை, சாதிப்பாகுபாடு, சமூக பண்பாட்டுக் காரணிகளுள், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் போன்ற காரணிகளும் முக்கியம் பெறுகின்றன.

## குழந்தைப் பேற்றின் பின் தவிர்த்துக் கொள்ளல் :

கருவளவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளில் குழந்தைப் பேற்றின்பின் கணவன் - மனைவி கருத்தரித்தலுக்கான காலப் பகுதியினைத் தவிர்த்து உடலுறவு கொள்ளுதலைத் பொறுத்து கருவளவாக்க நிலை காணப்படுகின்றது. அத்துடன் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலூட்டும் கால அளவும் கருவளவாக்கத்தைத் தவிர்க்கும் காலமாகவும் இருக்கின்றது. இது தவிர கருத்தடைச் சாதனங்களின் பாவனையும் குழந்தைப் பேற்றின் பின் தவிர்த்துக் கொள்ளக் காரணமாகிறது.

குழந்தைப் பேற்றின்பின் தவிர்த்துக்கொள்ளப் பயன்படுத்தப்படும் முறைகளில் பாதுகாப்பான, பாதுகாப்பற்ற காலம் சம்பந்தமான உள ரீதியான விளக்கம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. கர்ப்பம் தரிப்பதைத் தவிர்ப்பதற்கு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் புராதன வழிமுறைகள் மற்றும் விந்து வெளிவிடல் போன்றவற்றையும் கையாள்கின்றனர். பெரும்பாலானவர்கள் உறை, மாத்திரைகள், ஊசிகள் மூலமாகவே குழந்தைப் பேற்றைத் தவிர்த்துக் கொள்கின்றனர் I.U.D. சார்ந்த முறையில் அனுபவமின்மை, அறிவின்மை, பக்கவிளைவு பற்றிய பயம் என்பனவும் இவர்களை ஆட்கொண்டிருந்தது. மாத்திரைப் பயன்பாட்டை 19% ஆனவர்களும், ஊசி ஏற்றலை 14% ஆனவர்களும், உறைப் பயன்பாட்டில் 31% ஆனவர்களும், 36% ஆனவர்கள் புராதன முறைகளையும் கையாள்கின்றனர்.

**நேரடி சமூகக் காரணிகள் :**

கருவளத்தினுடைய போக்கை நேரடியாக நிர்ணயிப்பதில், செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளாகப் போஷணை நிலை, நகராக்கம், பொருளாதார நிலை, குடும்ப அமைப்பு, பெண்களின் சமூக அந்தஸ்து, அரசியல் முறைமை, தொழில்நிலை, கல்வி என்பன அமையப் பெறுகின்றன.

**போஷணை நிலை :**

போஷணை நிலையைப் பொறுத்தவரையில் இதற்கும் கருவள வாக்கத்திற்கும் இடையில் நெருக்கமான தொடர்பு ஒன்று இருப்பது புலப்படுகின்றது. போஷணை மட்டம் சீராகப் பேணப்படும் போது ஆரோக்கியமான குழந்தை கிடைப்பதாகவும், போஷணை மட்டத்தை விட அதிகமான கொழுப்பு, புரதம் சேரும் போது குழந்தை கிடைக்காத நிலை ஏற்படுவதற்கும் போஷணை மட்டம் குறையும் போது ஆரோக்கியமற்ற குழந்தை பிறப்பதற்கும் ஏதுவாகின்றது.
(குகபாலன். கா.1995).

இப்பிரதேசத்தில் தாயினுடைய போஷணை மற்றும் சுகாதார நிலையைப் பேணுவதில், இப்பிரதேசத்தின் இருபெரும் பிரிவுகளான கல்முனை வடக்கு, கல்முனைத் தெற்கு ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கடமையாற்றுகின்ற சுகாதாரப் பணிப்பாளர்கள் உள்ளனர். அவர்களது அலுவலகம் மூலமாகப் பின்வரும் சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன.

1. குழந்தைத் தடுப்பூசி ஏற்றல்.
2. கற்பிணித் தாய்மார்களுக்கான பரிசோதனையும், ஆலோசனையும் வழங்குதல்.
3. குழந்தையின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துதல்.
4. பிரதேசத்தின் பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்.

5. கிராமிய மட்டத் தொண்டர்கள் ஊடாக சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. சுற்றுச் சூழலைச் சுகாதாரச் சீர்கேட்டிலிருந்து பாதுகாத்தல். தடுப்பூசி போடுதல், கற்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை அளித்தல், குழந்தை தாய் ஆகியோர்களுக்கான திரிபோஷா வழங்குதல்.

இங்கு காணப்படும் இரண்டு ஆதார வைத்தியசாலையிலும் பிரசவத்திற்கு வந்திருக்கும் கற்பிணித் தாய்மார்களின் போஷணை நிலையைப் பேணுவதற்காக உள்நாட்டில் கிடைக்கும் உணவுகளான அரிசி, பருப்பு, பயறு, சோளம், ஈரப்பலா, வற்றாளைக் கிழங்கு, மரக்கறி வகைகள் வழங்கப்படுகின்றன. தினமும் 03 வேளை உணவுடன் வேறு சத்துள்ள உணவுகளும் அளிக்கப் படுகின்றன. அயடின் குறைபாடு இல்லாத வண்ணம் தாயினுடைய உடல் நிலையைப் பேணுவதில் கவனம் எடுக்கப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் போதியளவு நெல் உற்பத்தியோடு, கரையோர மீன்பிடி, நன்னீர் மீன்பிடி, என்பன காணப்படுகின்றன. இம்மீன் உணவில் புரதம் நிறைவாகக் காணப்படுகின்றது. ஆனாலும் இங்கு வாழும் மக்களில் 35%–38% மட்டுமே ஓரளவு நாள் ஒன்றுக்குத் தேவையான கலோரி உணவை உட்கொள்கின்றனர். அதேவேளை 30%மானவர்கள் வறுமையால் பீடிக்கப்பட்டு நாளாந்தம் போதிய உணவின்றி அவதிப்படுகின்றனர். இத்தகைய மக்கள் பல நோய்களின் தாக்கங்களுக்கு உட்படுவதுடன், இத்தகையவர்கள் மத்தியில் தாய், சேய் மரண வீதம் உயர்வாகவும் உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில் அதிக தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். சுய தொழில் விருத்திக்கான கடன் வசதியை விரிவுபடுத்தல், அரசினால் வழங்கப்படும் உதவித் திட்டங்களைப் பெறல் முதலியன வசதி குறைந்த அனைத்து மக்களையும் சென்றடையக் கூடிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இம்முயற்சியினால் ஓரளவேனும் வறுமையைப் போக்க முடியும்.

**நகராக்கம் :**

நகராக்க நிலையானது கருவளவாக்கச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் பிரதான இடத்தை வகிக்கின்றது. பொதுவாக, கருவளவாக்கம் ஒப்பீட்டளவில் நகரத்தைவிட கிராமங்களில் அதிகமாக இருக்கின்றது. கிராம மக்கள் இறைபக்தி கொண்டவர்களாகவும், கூட்டுக் குடும்ப அமைப்புக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் இங்கு கருவளவாக்கம் அதிகமாகவுள்ளது. இப்பிரதேசம் நிர்வாக அதிகாரப் பரவலாக்கலினால் இன்று மாநகர அந்தஸ்தை அடைந்துள்ளது. நகரைச் சூழ்ந்து காணப்படுகின்ற பிரதேசங்கள் அனைத்தும் தமது பொருளாதார நிர்வாக நடவடிக்கைகளை நகரத்திலேயே பெற்றுக் கொள்கின்றன. சந்தைவாய்ப்பு, வங்கிக் காசோலை, காப்புறுதி, நிருவாக அலுவல்கள், தூர இடங்களுக்கான போக்குவரத்து வலைப்பின்னலமைப்பு, தொடர்பாடல் போன்ற சேவையினை இங்கு எடுத்துக் காட்டலாம்.

இவ்வாறான நகர வளர்ச்சியால், கல்முனை நகருக்குள் ஏனைய கிராமியப் பகுதியிலிருந்து உள்வரவு ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் இப்பிரதேசம் நோக்கி இடப்பெயர்வு செய்தவர்களில் அதிகமானவர்கள் இளவயதுள்ளவர்களாகவும், கிராமியப் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்தவர்களாகவும் இருப்பதாலும் கருத்தடை பற்றி அறிவதில் பலவீனமானவர்களாக இவர்கள் இருப்பதாலும் இங்கு அதிக கருவளவாக்கம் காணப்படுகின்றது. இருந்தும் இங்கு அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப பிரதேச ரீதியாக வர்த்தக சேவைகள் பூரணப்படுத்தப் படாமையால் இந்நகரமைய அமைப்பில் இன்றும் பல்வேறு பிரதேசங்களுடைய செயற்பாடுகளில், தங்கிவாழும் தன்மையினைக் காண முடிகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை ஏறக்குறைய 07 இற்குக் குறைவாகவே காணப்படுகின்றது. அத்தோடு குழந்தைகளுக்கான இடைவெளியானது இரண்டு வருடம் என்ற அடிப்படையை பேணுபவர்களாக உள்ளனர். அத்துடன் கருத்தடை பற்றிய அறிவில் ஏதாவது ஒருமுறை பற்றிய தகவல்களை அறிந்தும் வைத்திருக்கின்றார்கள். அத்தோடு இவர்களது குழந்தைகள்

சுகதேகியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் நகரை அண்டிய பகுதியில் சனத்தொகை செறிவாகக் காணப்பட்டபோதும் அங்குள்ள வசதிபடைத்த கல்வியறிவுடைய மக்களுடைய கருவளவாக்கத்தன்மை குறைவாகக் காணப்படுவதோடு கிராமப் பகுதிகளில் உள்ள மக்களிடையே கருவளவாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

## பொருளாதார நிலை :

மத்தியதர வர்க்கத்தினர்களும், வறுமையில் உள்ளவர்களும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றனர். சில குறிப்பிட்ட இடங்களில் வசதி படைத்தவர்களும் காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தைப் பொறுத்த வரையில் பொருளாதார முன்னெடுப்புக்கள் என்ற ரீதியில் வர்த்தகமே பிரதானமாகின்றது. இதைத் தவிர கடற்தொழில், விவசாயம் அரச உத்தியோகம் என்பனவும் அடுத்தடுத்த நிலைகளில் காணப்படுகின்றன. இவற்றில் அரச உத்தியோகம் தவிர மற்றையவை கடின தொழிலாக உள்ளன. இங்கு காணப்படுகின்ற இயற்கை வளங்களைப் பெரும் முயற்சியின் மூலமே தங்களது பொருளாதாரத்துக்கு ஏற்றவையாக மாற்ற வேண்டியநிலை காணப்படுகிறது.

பாண்டியிருப்பு, இஸ்லாமாபாத், கல்முனைக்குடி போன்ற பிரதேசங்களில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். அநேகமான குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தங்களது பாடசாலை நேரம் முடிந்தவுடன் தந்தைமாரோடு சேர்ந்து மீன்பிடித் தொழிலும், வாகனம் திருத்தும் நிலையங்களிலும் வேலை செய்கின்றார்கள். எனவே, இந்தப் பிரதேசத்தில் வருமான மட்டம், கருவளவாக்கத்தைத் தீர்மானிப்பதில் பிரதானமாகின்றது. வருமான அடிமட்ட நிலையிலுள்ளவர்கள் மத்தியிலும், அதிக கூடிய வருமானமுள்ளவர்கள் மத்தியிலும் அதிக கருவளவாக்கம் காணப்படுகின்றது.

அட்டவணை – VIII

## கல்முனைப் பிரதேசத்தில் குடும்பங்களின் வருமானம் பற்றிய தகவல் - 2000

| மாத வருமானம் | குடும்ப எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ரூபா 500.00 இற்குக் குறைய | 6739 | 28.40% |
| ரூபா 501.00 – 1000.00 | 7225 | 30.45% |
| ரூபா 1000.00 – 3000.00 | 4031 | 16.99% |
| ரூபா 3000.00 – 5000.00 | 2519 | 10.61% |
| ரூபா 5000.00 இற்கு மேல் | 3217 | 13.55% |
| **மொத்தம்** | **23731** | **100.00%** |

ஆதாரம் : பிரதேச செயலகம், கல்முனை – 2000

மேலுள்ள அட்டவணையை நோக்கினால் ரூபா 500.00 இற்குக் குறைவான வருமான வகுப்பினரிடையேயும், 501.00 – 1000.00 வரையான வருமான வகுப்பினரிடையேயுமே கருவளவாக்க வீதம் கூடுதலாகக் காணப்படுகின்றது.

### குடும்ப அமைப்பு :

குடும்ப அமைப்பு கருவளவாக்க வளத்தினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. குடும்ப அமைப்பைப் பொறுத்தவரையில் கூட்டுக் குடும்ப அமைப்பு முறை, தனிக்குடும்ப அமைப்பு முறை என இரண்டு பிரிவாகக் குடும்ப அமைப்பு காணப்பட்ட போதும், தனிக்குடும்ப அமைப்பு முறையே பிரதானமாக இதில் செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுகின்றது.

பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து வைக்கும்போது அவர்களுக்குப் பெற்றோர் வீடு கட்டிக் கொடுக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. இது அதிக கருவளவாக்கத்திற்கு வழியமைக்கின்றது.

## பெண்களின் சமூக அந்தஸ்து :

பெண்களின் சமூக அந்தஸ்து, நிலையான கருவளவாக்கத்தைத் தீர்மானிப்பதில் பெரிதும் முன்னிற்கின்றது. சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சம அந்தஸ்து உடையவர்களாக வேண்டுமெனில் சிறப்பான கல்வி, தொழில்வாய்ப்பில் நிலைத்த தன்மை, சமூக நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றிருத்தல், முன்னேற்றகரமான பொருளாதார நிலை, தங்கிவாழும் தன்மை விட்டொழிக்கப்படல் போன்றவற்றில் முன்னேற்றம் காணப்பட வேண்டும். இந்த மக்களிடையே கூடுதலாகப் பெண்களின் சமூக அந்தஸ்து பற்றிய கருத்தாடல்கள் விருத்தி பெற்றதாகக் காணப்படுகின்ற போதும் முஸ்லிம்களிடையே இது பற்றிய விழிப்புணர்வு மந்த கதியிலேயே காணப்படுகின்றது. இஸ்லாமாபாத், நாயப்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு போன்ற கிராமங்களில் பெண்களில் அதிகமானோர் கல்வியறிவின்மை, பொழுதுபோக்கின்மை, இளவயதில் விவாகநிலை, தந்தை வழியுரிமை சட்டத்தினைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்பவர்களாகவும் உள்ளனர். இதனால் அதிகளவான கருவளவாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

## அரச சுகாதார சேவை :

மருத்துவத் துறையில் சமூகநலம் சார்ந்த மருத்துவத்துறை அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி (Medical Officer of Health) என்ற தனிப்பிரிவின் கீழ் இனவிருத்தி, சுகாதார சேவைகள் திட்டத்தின்படி ஆய்வுப் பிரதேசத்தின் சுகாதார அதிகாரிகளைப் பயன்படுத்தி அரசு முறைமை கருவளவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இங்கு தாயின் போஷணை நிலை, தனிநபர் சுகாதாரம், நித்திரையும் ஓய்வும், வேலையும் உடற்பயிற்சியும், தாய்ப்பாலூட்டல், குடும்பத்திட்டமிடல், கர்ப்பிணித் தாய்மார்களின் கவனிப்பு, கர்ப்பவதியின் பதிவேட்டை வழங்குதல், ஆபத்து நிலையைக் கண்டறிதல், மலட்டுத் தன்மையுள்ள தம்பதிகளுக்கு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள உதவுதல். பாதுகாப்பான பிரசவம், பிள்ளைக் கவனிப்பு, பாலியல் தொடர்பான அறிவுரை, மார்பக, கர்ப்பப்பை, புற்றுநோய் போன்றவற்றை நேரகாலத்தில் இனங்காண்பதற்கான வசதிகள் என்பன கருவளவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**கர்ப்பத்தடை :**

கர்ப்பத்தடை முறைகளாக மாத்திரை, ஆணுறை ஆகியவற்றை அரச சுகாதார சேவையாளர் வழங்குகின்றனர். மகப்பேற்று வைத்தியசாலைகளில் கருப்பை உட்சுருள், ஊசி மூலம் புகுத்தப்படும் ஹோமோன், டிப்போ புரோவிரே போன்றவையும் வழங்கப்படுகின்றன. அரசின் மூலம் கிடைக்கப்பெறும் கருத்தடை முறைகளாவன.

நிரந்தர முறைகள்
- ஆண்களுக்கான சத்திர சிகிச்சை (வாசெக்டமி)
- பெண்களுக்கான சத்திர சிகிச்சை (யூபெக்டமி)

**தற்காலிக முறைகள் :**

**செயற்கை முறைகள்**

- மாத்திரைகள்
- கருப்பை உட்சுருள்
- ஊசிமருந்து
- நோ பிளான்ட்
- பாதுகாப்பான காலத்தைத் தெரிதல்
- விந்து வெளியேற்றல்.

## கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கம் தொடர்பான பிரச்சினைகள் :

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் வளங்களில் மனித வளமானது தலையாய வளமாகக் கருதப்படுகிறது. ஆனாலும், இதுவே இன்றைய சகல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. அதிக குடித்தொகைப் பெருக்கம் கருவளவாக்கத்துடன் தொடர்பான, அதனுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. அந்தவகையில் கல்முனைப் பிரசேத்திலும் கருவளவாக்கம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கமானது கடந்த தசாப்தத்தில் உயர்வுப் பெறுமானத்தில் நகர்ந்து செல்வதனை அவதானிக்கலாம். பிறப்பு வீதம், உத்தேசிக்கப்பட்டதை விட அதிகரித்துள்ளது. அவ்வாறே சிசு மரண வீதம் குறைந்துள்ளது. இதற்குச் சீரான மருத்துவ வசதிகள் வழங்கலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. இதனால் கல்முனைப் பிரதேசத்தில் குடித்தொகை துரித அதிகரிப்பைப் பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில் வதிவிடம் சார்ந்ததும் அவ்வாறே நிலவளம் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்ததுமான பிரச்சினைகளையும் இது ஏற்படுத்தியுள்ளது.

### 1. வதிவிடப் பிரச்சினை :

- இப்பிரதேசத்தில் அதிகரித்த கருவளவாக்கத்தின் காரணமாகப் பெருக்கமுற்ற குடித்தொகையின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான வதிவிட வசதிகள் ஏற்படுத்தப்பட வில்லை.

- சிறிய அளவிலான நிலப்பரப்பிற்குள் அதிகளவான குடியிருப்புக்கள் அமைக்கப்பட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால் குடி நிலங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

- இப்பிரதேசங்களில் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் நிலம் சிறியதாகத் துண்டாடப்படுவதுடன் குடிமனைகளும் சிறியனவாக மாறுகின்றன, தவிர, உயர் மாடிகளாகவும் மாறுகின்றன. மேலும், ஒரு மனையில் பல குடும்பங்கள் குடியிருக்க வேண்டியும் ஏற்படுகிறது. இது பல்வேறு சமூக பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

- இப்பிரதேச குடிமனைகளின் அடர்த்தியானது பல்வேறு சுகாதார பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது. மலசல கூடங்களின் நெருக்கம் குடிநீர்ப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

- இப்பிரதேச குடிகள் அனைவரும் நிரந்தர மனைகளைக் கொண்டிருக்காததும் மற்றொரு பிரச்சினையாக அமையப் பெறுகிறது.

## 2. நிலத்தின் மீதான தாக்கம் :

- அதிகரித்துவரும் பிறப்பாக்கத்திற்கு ஏற்ப இப்பிரதேச நிலவளம் அதிகரிக்கப்படாமை மற்றொரு பிரச்சினையாகும். இதனால் நிலப் பயன்பாடும் அதாவது பயிர்ச்செய்கை உற்பத்தியாக்கம் என்பன குறைகின்றன. இதனால் உணவு உற்பத்தி குறைகிறது. தற்போது இப்பிரதேசத்தில் போதியளவு பயிர்ச்செய்கை நிலங்கள் இல்லை. அவை குடியிருப்புக்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தில் கடலை அண்டிய கரையோரங்களிலும் கூட குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்து காணப்படுகின்றன. இது கடற்சூழலைப் பாதிக்கச் செய்துள்ளது.

- அதிகரித்துவரும் குடித்தொகைக்கு ஏற்ப நகராக்கம் திட்டமிடப்படாது மேற்கொள்ளப்படுவதால் திடீர் வெள்ளம், கழிவு நீர்ப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

- நிலவளம் குறைவதால் அதனுடன் சார்ந்த உற்பத்தித்திறனும் குறைவடைகின்றது. இது பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

- நிலவளம் குறைவடைவதனால் நிலத்தின் தாவரப் போர்வை பாதிப்படைதல், உயிரினப் பரம்பலும் பல்லினத் தன்மையும், மாற்றமடைதல் தாவர விலங்குக் கூட்டுக்கள் மாற்றமடைதல், நைதரசன், சல்பர், காபன் வட்டங்கள் மாறுதலடைதல் போன்ற உயிரினப் பாதிப்புக்கள் இடம்பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

## 3. சுற்றுச் சூழல் பிரச்சினை :

- அதிகரித்த சனத்தொகையினால் ஏற்படும் குடிமனைப் பிரச்சினையை ஈடு செய்யும்போது, இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்படாத நகராக்கம் காரணமாகப் பல்வேறு சுற்றாடல், சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. போதிய வடிகாலமைப்பு வசதிகள் இன்மையால் கழிவகற்றல் செயற்பாடு சிறப்பாக நடந்தேறுவதில்லை. கழிவு நீர், மழை நீர் என்பன தேங்கி நிற்பதால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது.

- நீர் நிலைகள் சேரிகள் வீதியோரங்கள் என்பவற்றில் குப்பை கூழங்கள் அழுக்குகள் என்பவற்றின் அதிகரிப்பானது, குடிகளின் சுகாதார நிலைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

- அதிகரித்த பிறப்பாக்கத்திற்கு ஏற்ப விவசாய நிலப் பயன்பாட்டின் போதாமை காரணமாக இப்பிரதேசத்தில் கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. விசேடமாக அரிசி ஆலைகள் போன்றவற்றிலிருந்து

வெளிவரும் தூசுகள் கழிவுகள் இப்பிரதேசத்தின் சுற்றுச் சூழலைப் பெருமளவு மாசடையச் செய்கின்றன.

- சிறந்த சுகாதார வசதிகள், நோய்த்தடுப்பு பராமரிப்பு முறைகள் என்பனவும் குறைபாடுடையதாகவே உள்ளன.

- கருவளவாக்கத்தின் நிலையினைப் பேணுவதில் கல்வி மட்டம் முக்கிய இடத்தினை வகிக்கிறது. ஆய்வுப் பிரதேசத்தில் கல்வி மட்டம் எங்கும் ஒரே நிலையில் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது. பொதுவாகக் கல்முனைப் பிரதேசத்தில் தகுதிவாய்ந்த பாடசாலைகள், மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் எல்லாம் நகரினை அண்டிய பகுதியிலேயே உள்ளன. இப்பிரதேசத்தின் உயர் கல்வியைப் பெறுவதற்கு இந்நகரை அண்டிய பாடசாலைகளுக்கே மாணவர்கள் வரவேண்டியுள்ளது. இது எல்லா மட்டங்களிலுமுள்ள பிள்ளைகள் உயர்கல்வி பெறுவதைத் தடுக்கிறது. இது பிள்ளைகள் தங்களுடைய சூழலிலுள்ள அல்லது பெற்றோர் வழி சார்ந்த தொழில்களை நாடுவதற்குத் துணை செய்வதுடன் அது காலப் போக்கில் அதிகரித்த கருவளவாக்கச் செயற்பாட்டுக்கும் வழிவகுக்கிறது.

- கருவளவாக்கத்தில் அதிகரிப்பு ஏற்படுவதற்குப் பெண்களுக்குப் போதிய சுதந்திரங்கள் வழங்கப்படாமையையும் ஒரு காரணமாகச் சுட்டிக் காட்டலாம். அதாவது பெண்களின் கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படுவது குறைவாகவே உள்ளது. இதனால் பெண் விரும்பியோ விரும்பாமலோ குடித்தொகை அதிகரிப்புக்குக் காரணமாகிறாள்.

- கருவளவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துவதில் மதம் சார்ந்த நம்பிக்கைகளும் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. சில மதங்கள் அதிகரித்த கருவளவாக்கத்துக்கு ஆதரவும் தெரிவிக்கின்றன.

- அதிகரித்த கருவளவாக்கத்தால் ஏற்படும் மற்றொரு பிரச்சினை இனப் பரம்பல்சார் பிரச்சினையாகும். இது இன முரண்பாடுகளுக்கு வித்திட்டுள்ளது. இந்நிலையைக் கல்முனைப் பிரதேசத்திலும் அவதானிக்க முடிகிறது.

- அதிக கருவளவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளும் அல்லது சாதனங்களும், பெரும் சமூக, ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. சில மதங்கள் கருத்தடையை, குடும்பத்திட்டத்தை, கருக்கலைப்பை முற்றாக வெறுக்கின்றன, தடுக்கின்றன. இது சமூக மட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

## கல்முனைப் பிரதேசத்தின் கருவளவாக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் :

- அதிகரித்த குடித்தொகையினருக்கான வதிவிடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரச துறைகளால் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களைச் செயற்திறன் மிக்கனவாக விரிவாக்குதல் வேண்டும். வீடமைப்புத் திட்டங்களில் வீடில்லாதோருக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். தொடர்மாடிக் கட்டிடங்கள் அமைத்தல், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்களை வழங்கல் என்பனவற்றின் மூலமாக இப்பிரதேசத்தின் அதிகரித்த கருவளவாக்கத்தின் மூலமான வதிவிடப் பிரச்சினைகளை ஓரளவு குறைக்கலாம்.

- சிறந்த குடிநீரினைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றொரு தேவையாக உள்ளது. இதற்காகக் கிணற்று நீரினை மட்டும் நம்பியிராது குழாய் நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பயன்மிக்கதாக அமையும். இதனால் நீர் மூலமாக ஏற்படும் நோய்களினையும் கட்டுப்படுத்தலாம். அத்துடன் மலசலகூட கழிவகற்றும் முறையான திட்டத்தினையும் முன்னெடுத்தல் அவசியமானதாகும்.

- அதிகரித்த கருவளவாக்கத்தின் மூலமான நிலப்பயன் பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சிறந்த நில முகாமைத்துவம் இன்றியமையாதது. அதனூடாக மக்கள் விளிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் நிலப் பயன்பாடு, சூழல் பாதுகாப்பு, உற்பத்திப் பெருக்கம் என்பன ஏற்படும்.

- தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தச் செய்வதும் விவசாய உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதும் இப்பிரதேசத்தின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்ய உதவும். தவிர நிலத்தின் உற்பத்தித் திறனைப் பேணுவதும் அவசியமாகிறது.

- சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தினைச் செயற்பாடு மிக்கதாக முன்னெடுப்பது அவசியமாகிறது. கழிவு நீர் அகற்றல் செயற்திட்டம், கழிவுப் பொருட்கள் அகற்றல் செயற்திட்டம், வடிகாலமைப்பு வசதிகள் என்பனவற்றைச் செயற்திறன் மிக்கவகையில் முன்னெடுக்க வேண்டும்.

- சூழல் மாசுபடுதலை ஏற்படுத்துவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சூழல் பாதுகாப்பினை மேற்கொள்வதற்குமான அதிகாரபூர்வமான சட்ட ரீதியான அமைப்பினை ஏற்படுத்துதல் அவசியமாகிறது. அல்லது இருக்கும் ஏற்பாடுகளை வினைத்திறன் மிக்கனவாக ஆக்குதல் வேண்டும்.

- கருவளவாக்க நிலையை ஒரு மட்டத்தில் பேணுவதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. இதற்கு இப்பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் போதிய உயர்கல்வி வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகிறது. அவ்வாறே சிறந்த தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதும் அவசியமாகிறது. ஏனெனில், தொழிலின்மையும் கருவளவாக்கத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது.

- அதிகரித்த கருவளவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பெண்களுக்கு வழங்கும் சமத்துவமும், பெண்களின் கருத்துக்களை மதிப்பதும் பெரும் பங்களிப்புச் செய்யும்.

- அதிகரித்த குடித்தொகையால் ஏற்படும் இன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இனப் புரிந்துணர்வு, சமூக நல்லிணக்கம் போன்ற சிந்தனைகளை வழங்குவது அவசியமாகிறது. ஊடகங்கள், மதத் தலைவர்கள் அரசியல்வாதிகள் முதலியோர் விடயத்தில் ஒன்றுபட்டுச் செயற்படுவது அவசியமாகின்றது.

- கருவளவாக்கத்தை சீரான மத்திமமட்டத்தில் பேணும் வகையில் சிறந்த கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை சுகாதார அமைப்புக்கள் குடும்ப மட்டத்தில் போதிக்க வேண்டும்.

- கருவளவாக்கத் தடுப்பு முறைகள் மதம் சார்ந்த விழுமியங்களைப் பாதிக்காமலும் எதிர்கால மனித வளத்தின் அவசியத்தினைக் கருத்திற் கொண்டும் முன்னெடுக்கப்படல் வேண்டும். ஏனெனில், வளங்களில் தலையாய வளமாகிய மனித வளத்தைப் பாதுகாப்பதே எமது எதிர்காலக் கடமை.

**முடிவுரை :**

கல்முனைப் பிரதேச கருவளவாக்கத்தின் போக்குகள் என்ற இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட சில முடிவுகள்.

- இப்பிரதேச கிராமப்புற நகரப்புற மக்களிடையேயான கருவளவாக்க வேறுபாடு முக்கியமான ஒன்றாக உள்ளது.

- கிராமப்புறக் கரையோரச் சூழலில் வாழ்பவர்களிடையே கருவளவாக்கம் உயர் நிலையில் உள்ளது. அவ்வாறே நகரை அண்டிய பிரதேசத்தில் வாழ்பவர்களிடையே கருவளவாக்க மட்டம் ஒரு பேணுதல் மட்டத்திலுள்ளது. இந்நிலைக்கு இவ்விரு பகுதியிலும் உள்ள சமூக, பொருளாதார கட்டமைப்புக்கள் வாழ்க்கைத் தரம், கருத்தடை முறை என்பன பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளன.

- இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம் ஆகிய இரு இனத்தவர்களிடையேயும் கருச்சிதைவு செய்யும் நிலை அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. அது எவ்வாறான முறையில் நடந்தேறியுள்ளது என்பதைத் தெளிவாக அறிய முடியாமை ஒரு குறைபாடாக உள்ளது. ஆனாலும், பல்வேறு கருத்தடை முறைகளும் பயன்படுத்தப்படுவதும் நோக்கத்தக்கது.

- ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம்கள், தமிழர்கள், ரோமன், கத்தோலிக்கர்கள், சிறிதளவு சிங்களவர் என பல இனத்தவர்களும் வாழ்ந்த போதும் முஸ்லிம்களின் கருவள மட்டம் உயர்ந்தளவில் உள்ளமையினை சிறப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கு மதம் சார்ந்த கோட்பாடுகள் பெரும்பங்களிப்பைச் செய்திருக்கலாம். அவ்வாறே தமிழர்களிடையே ஆரம்பத்தில் கருவளவாக்கம் அதிகரித்திருந்த போதும் அண்மைக்கால இன முரண்பாடுகள், அதனால் ஏற்பட்ட இடப் பெயர்வுகள் மற்றும் கல்விக்கான நேர ஒதுக்கீடுகள் இவர்களிடையே கருவள ஆற்றலைப் பின்னடையச் செய்திருக்கின்றமைக்குக் காரணமெனலாம்.

எனவே, கல்முனைப் பிரதேச கருவளவாக்கத்தின் போக்கினை நோக்கும் போது இங்கு மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களை விடவும் நாட்டின் சராசரி நிலையினை விடவும் உயர் போக்கிலான கருவளவாக்கச் செயற்பாட்டை அடையாளம் காண முடிகிறது. விசேடமாக கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிடையே கருவளவாக்கம் உயர்ந்த நிலையில் இருப்பதுடன் அது பல்வேறு சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது. இங்குள்ள மக்களிடையேயான பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், கல்வி மட்ட வேறுபாடு, மதம் சார்ந்த கோட்பாடுகள் இங்கு கருவளவாக்கத்தின் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதை அவதானிக்கலாம்.

இங்கு அதிகரித்த கருவளவாக்கத்தின் மூலமாக ஏற்பட்ட குடித்தொகை அதிகரிப்பானது இப்பிரதேசத்தில் பாரிய நிலம் சார் சுற்றுச் சூழல், குடியிருப்புப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. விசேடமாக நிலப் பயன்பாட்டுப் பிரச்சினை அதனோடு தொடர்பான பிரச்சினைகள் இதில் முக்கியம் பெறுகின்றன.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் கருவளவாக்கத்தினை ஒரு எதிர்கால நடைமுறைத் தேவைக்கு ஏற்ப கட்டுப்படுத்துதல் அவசியமாகிறது. தமது இனங்களின் மேலாண்மையை ஏற்படுத்த கருவளவாக்கத்தைப் பயன்படுத்த ஒரு சமூகம் முயற்சிக்கலாம். ஆனால், அதன் மூலம் ஏற்படுகின்ற சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகளையும் அறிந்து அதற்கு ஏற்பச் செயற்படுவதே மனித வளத்தின் நிலையான இருப்புக்கு வழிவகுக்கும்.